# மதுராந்தகம் அருகே 14–ஆம் நூற்றாண்டு மகிஷாசுரமர்த்தினி சிற்பம் கண்டெடுப்பு

மதுராந்தகம், ஜூலை 2: மதுராந்தகம் அடுத்த அகரம் கிராமத்தில் 14–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிஷாசுரமர்த்தினி சிற்பம் கண்டெடுக்கப்பட்டது.



அகரம் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட 14–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிஷாசுரமர்த்தினி சிற்பம்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், அகரம் கிராமத்தில் 14–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிஷாசுரமர்த்தினி சிற்பம் இருப்பதை அறிந்து தொல்லியல் ஆய்வாளர்களான தருமபுரி அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் சி.சந்திரசேகர், மதுராந்தகம் இந்து மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் இரா. ரமேஷ் ஆகியோர் அங்கு சென்று ஆய்வு செய்தனர்.

இது குறித்து அவர்கள் கூறியது:

தமிழகத்தில் அதிக அளவில் கிடைத்துள்ள பலகை கல் சிற்பங்களில் பெரிதும் காணப்படும் உருவம் துர்கையம்மன். தாய் தெய்வ வழிபாட்டின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில், கொற்றவை, துர்கை, பிரம்பகதனி போன்ற பல்வேறு பெயர்களில் காளியை வழிபடும் முறை இருந்தது. இத்தகைய காளியானது மகிஷாசுரமர்த்தினி வகையைச் சார்ந்ததாகும். சுமார் 8 அடி உயரத்துடன், 8 கரங்கள் போன்ற நிலைகளில் காணப்படும் மகிஷாசுரன் எனப்படும் எருமை தலை சூரனின் தலை மீது நின்றவாறு காளி காட்சி அளிக்கிறாள். தலையில் கொண்டையுடன் நீண்ட சடை முடியுடன் மார்பு கச்சையுடன் இங்குள்ள காளி சிலை காட்சி அளிக்கிறாள். காளியின் வலது புறம் உள்ள ஒரு கரத்தில் மணி, 2–ஆவது கையில், நாக சாட்டை, 3–ஆவது கையில் பெரிய வாள், 4–ஆவது கரத்தில் மான் கொம்பு ஆயுதமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கழுத்தில் ஒரே ஒரு நகை காட்டப்பட்டுள்ளது. இடுப்பு முழங்காலுக்கு மேல் ஆண்கள் அணியும் அரைக்கால் சட்டை, இடுப்பில் பாம்பினால் கட்டப்பட்ட கயிற்றோடு அமைக்கப்பட்டுள்ளது. கால்களில் வீரத் தண்டுகள், கீழே காணப்படுகிற எருமைத் தலையின் மேல் இரு கால்கள் ஊன்றி நின்றவாறு உள்ளது.

எருமையின் இரு கொம்புகள் இருபுறமும் வளைந்த நிலையிலும், அதன் காதுகள் அதற்கு கீழ் நோக்கி உள்ளவாறும் உள்ளது.

இந்த சிலை மகிஷாசுரமர்த்தினிதான் என்பதை உணர்த்தும் வகையில், இடதுபுறம் காக்கையும், வலது புறத்தில் நீண்ட கொம்புடைய மானும் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, தாய் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியாக இத்தகைய பலகை சிற்பம் காணப்படுகிறது என அவர்கள் தெரிவித்தனர்.

# சிவகங்கை அருகே பழைமையான அரிகண்டம் சிலை

**சிவகங்கை, ஜூலை 2:** சிவகங்கை அருகே ஆயிரம் ஆண்டுகள் பழைமையான அரிகண்டம் சிலையை தொல்லியலாளர்கள் கண்டெடுத்தனர்.



கண்டெடுக்கப்பட்ட பழைமையான அரிகண்டம் சிலை.

இது குறித்து சிவகங்கை தொல்நடைக் குழு நிறுவனர் புலவர் கா. காளிராசா செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை கூறியதாவது: சிவகங்கை தொல்நடைக் குழு செயலர் இரா. நரசிம்மன், இணைச் செயலர் க. முத்துக்குமார் ஆகியோருடன் சோழபுரம் பகுதியில் அண்மையில் கள ஆய்வு மேற்கொண்டோம். அப்போது சோழபுரத்திலிருந்து நாலுகோட்டைக்குச் செல்லும் வழியில் உள்ள எல்லைப் பிடாரி அம்மன் கோயிலில் பழைமையான அரிகண்டம் சிலை உள்ளது கண்டறியப்பட்டது.

இரண்டடி உயரம், ஒன்றரை அடி அகலமுடைய இந்தச் சிலை ஒரு காலை முன் வைத்து, மற்றொரு காலை பின் வைத்து மடக்கி அமர்ந்த நிலையில் அமைந்துள்ளது. மேலும், இடது கையில் தன் தலைக் குடுமியைப் பிடித்துக் கொண்டு, வலது கையில் வாளால் தன் தலையை அரிவது போலக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. காதில் காதணிகள், முன்கையில் வளையங்கள், கழுத்தில் பதக்கம் போன்ற ஆபரணங்கள் அணிந்துள்ளதால், இவர் படைத் தலைவராக இருந்திருக்கலாம்.

தலைவன் அல்லது மன்னன் போரில் வெற்றி பெற வேண்டியோ, நோயிலிருந்து குணமடைய வேண்டியோ காளி தேவியிடம் நேர்ந்து கொண்டு, அது நிறைவேறியதும் தன் தலையைத் தானே அரிந்து உயிர் விடுதல் அரிகண்டமாகும்.

இதேபோல, ஒன்பது இடங்களில் வெட்டி, உடலை ஒன்பது துண்டங்களாக்கி உயிர் துறப்பது நவகண்டம் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அரிகண்டம், நவகண்டம் பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவிப்பலி, தலைப்பலி, தன்பலி, அரிகண்டம் ஆகிய பெயர்களில் இவை வழங்கப்படுகின்றன.

இந்தக் கோயில் வளாகத்தில் காணப்படும் சிலை அமைப்பைப் பார்க்கும் போது, கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். இந்தச் சிலைக்கு அருகில் நடுகல் சிலை ஒன்றும் காணப்படுகிறது. இதில் மூன்று வீரர்கள் வரிசையாக நின்ற கோலத்தில் உள்ளனர். அனைவரும் வலது கையில் குத்துவாளை கீழ் ஊன்றியவாறும், ஒருவர் மட்டும் இடது கையில் வில்லை பிடித்தவாறும் உள்ளனர். முழுமையான வடிவமைப்பு தெரியாதவாறு சிலை மிகவும் சிதைந்து காணப்படுகிறது.

மற்றொரு சிலை அமர்ந்த நிலையில் எட்டுக் கரங்களுடன் காளியாகக் காட்சி அளிக்கிறது. இந்தச் சிலை முன்பாகவே தலைப்பலி நிகழ்ந்திருக்கலாம். மேலும், இந்தக் கோயிலில் யானை சிற்பம், திரிசூலமிட்ட எல்லைக் கல், விளக்குத் தூண் கல்வெட்டும் உள்ளன என்றார் அவர்.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் பழங்காலப் பொருள்கள் கண்டெடுப்பு



வெம்பக்கோட்டை அருகே நடைபெற்று வரும் அகழாய்வில் சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்ட சுடுமண் பானை, கூம்பு வடிவ விளக்கு. வட்ட வடிவ அகல் விளக்கு.

சாத்தூர், ஜூலை 2: சாத்தூர் அருகேயுள்ள வெம்பக்கோட்டை அருகே நடைபெற்று வரும் இரண்டாம் கட்ட அகழாய்வில் சுடுமண் பானை, கூம்பு வடிவ விளக்கு, வட்ட வடிவ அகல் விளக்கு ஆகிய பழங்காலப் பொருள்கள் சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகேயுள்ள விஜயகரி சல்குளம் ஊராட்சிக்குள்பட்ட உச்சிமேடு பகுதியில் இரண்டாம் கட்ட அகழாய்வுப் பணிகள் கடந்த ஏப்ரல் 6-ஆம் தேதி முதல் நடைபெற்று வருகின்றன. இதற்காக 8 குழிகள் தோண்டப்பட்டன.

இதுவரை தங்க அணிகலன்கள், தங்கப்பட்டை, சுடுமண்ணால் ஆன பொம்மை, புகைபிடிப்பான் கருவி, காதணி, எடைக் கல், பதக்கம், கண்ணாடி மணிகள், வணிக முத்திரை, சங்கு வளையல்கள், யானைத் தந்தத்தால் ஆன பகடை என 2 ஆயிரத்துக்கும் அதிகமான பழைமையான பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்த நிலையில், சுடுமண் பானை, அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கூம்பு வடிவ விளக்கு, வட்ட வடிவ அகல் விளக்கு ஆகியவை சனிக்கிழமை கண்டெடுக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் வசித்த நமது மூதாதையர்கள் மண்பாண்டக் கூடம் அமைத்து கலைநயம் மிக்க பொருள்களைத் தயாரித்திருக்கலாம் என தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.

EVA STALIN IAS ACADEMY

# ஜிஎஸ்டி–யில் ‘பயோமெட்ரிக்’ பதிவு நடைமுறை

## மத்திய அரசு திட்டம்

**புது தில்லி, ஜூலை 2:** சரக்கு–சேவை வரி (ஜிஎஸ்டி) சார்ந்த மோசடிகளைத் தடுப்பதற்காக ‘பயோமெட்ரிக்’ பதிவு நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்கு மத்திய மறைமுக வரிகள் வாரியம் திட்டமிட்டுள்ளது.

நாடு முழுவதும் ஜிஎஸ்டி அமல்படுத்தப்பட்டு 6 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஜிஎஸ்டி ஏய்ப்பு, மோசடிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், மத்திய மறைமுக வரிகள் வாரியத் தலைவர் விவேக் ஜோரி செய்தியாளர்களிடம் கூறுகையில், “ஜிஎஸ்டி பதிவு நடைமுறையில் பல்வேறு மோசடிகள் நடைபெறுவதை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். ஜிஎஸ்டி ஏய்ப்பில் ஈடுபடுவதற்காக சுமார் 12,500 நிறுவனங்கள் போலியாகத் தொடங்கப்பட்டுள்ளன. முக்கியமாக, தில்லி, ஹரியாணா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் போலி நிறுவனங்களின் செயல்பாடு அதிகமாக உள்ளது.

குஜராத், நொய்டா, கொல்கத்தா, அஸ்ஸாம், தெலங்கானா, தமிழ்நாடு, மகாராஷ்டிரம் உள்ளிட்ட பகுதிகளிலும் ஜிஎஸ்டி பதிவு நடைமுறையில் மோசடிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. உலோகங்கள், நெகிழிக் கழிவுகள், காகிதக் கழிவுகள் மேலாண்மைத் துறையில் அதிகமாக மோசடி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சேவைகளை அளிக்கும் நிறுவனங்களும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளது. விளம்பர நிறுவனங்கள், மனிதவள நிறுவனங்கள் உள்ளிட்டவை அத்தகைய மோசடிகளில் அதிகமாக ஈடுபட்டு வருகின்றன. போலியான ஆதார், பான் எண்களைக் கொண்டு பதிவு நடைமுறையில் மோசடியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதைத் தடுக்கும் வகையில் ஜிஎஸ்டி பதிவு நடைமுறையில் ‘பயோமெட்ரிக்’ அடையாள முறையை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பதிவு நடைமுறையின்போது வழங்கப்படும் முகவரியில் தான் சம்பந்தப்பட்ட நிறுவனம் செயல்படுகிறதா என்பதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளிலும் அதிகாரிகள் ஈடுபட உள்ளனர்.

மேற்கண்ட திட்டங்கள் சோதனை முறையில் ஏற்கெனவே சில மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் முடிவுகளை ஆராய்ந்தபிறகு, நாடு முழுவதும் அந்தத் திட்டங்கள் அமல்படுத்தப்படும். ஜிஎஸ்டி கட்டமைப்பைத் தொடர்ந்து வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன” என்றார்.

**இந்திய கடற்படையினருடன் கூட்டுப் பயிற்சி**

# அரக்கோணம் வந்த ஆஸ்திரேலிய அதிநவீன கடல்சார் ரோந்து விமானம்

**அரக்கோணம், ஜூலை 2:** இந்திய -ஆஸ்திரேலிய கடற்படைகளின் கூட்டுப் பயிற்சிக்காக ஆஸ்திரேலியாவில் இருந்து அந்த நாட்டின் கடல்சார் ரோந்து மற்றும் உளவு விமானமான எம்பிஆர்ஏ அரக்கோணம் ஐஎன்எஸ் ராஜாளி கடற்படை விமானதளத்துக்கு வந்துள்ளது.

அண்மைக் காலங்களில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையே கடலில் இருதரப்பு மற்றும் பலதரப்பு பயிற்சிகள் மூலம் தொடர்புகள் அதிகரித்துள்ளது. ஏற்கெனவே கடந்த 2022-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் தேதி இந்திய கடற்படையின் அதிநவீன ரோந்து விமானமான பி8ஐ ஆஸ்திரேலியாவின் டார்வின் படைத் தளத்துக்குச் சென்று, அப்போது அங்கு இரு நாட்டு கடற்படையினரும் அங்கு கூட்டுப் பயிற்சி மேற்கொண்டனர். மேலும் பி8ஐ விமானங்கள் ஏற்கெனவே அவற்றின் நீண்ட தூரத்தை வெளிப்படுத்தி மலபார் மற்றும் ஆசின்டெக்ஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற தொடர் பயிற்சிகளின்போது கூட்டாக செயல்பட்டுள்ளன.



அரக்கோணம் ஐஎன்எஸ் ராஜாளி கடற்படை விமான தளத்துக்கு வந்த ஆஸ்திரேலிய அதிநவீன போர் விமானமான எம்பிஆர்ஏவுடன் அதன் குழுவினர்.

தற்போது ஆஸ்திரேலியாவின் கடல்சார் ரோந்து மற்றும் உளவு விமானமான எம்பிஆர்ஏ இந்தியாவுடனான கூட்டுப் பயிற்சிக்காக கடந்த ஜூன் 30-ஆம் தேதி அரக்கோணம் ஐஎன்எஸ் ராஜாளி கடற்படை விமானதளத்துக்குவந்துள்ளது. தற்போது இந்த விமானத்தில் வந்துள்ள ராயல் ஆஸ்திரேலியா விமானப் படையின் 92-ஆவது பிரிவு வீரர்கள், இந்திய குழுவினருடன் இணைந்து கடல்சார் விழிப்புணர்வை மேம்படுத்துதல், நீர்மூழ்கி எதிர்ப்புப் போர், மேற்பரப்பு கண்காணிப்பு, இந்திய ஆஸ்திரேலிய பாதுகாப்பு படைகளுக்கு இடையே பணி திட்டமிடல், பணியாளர்கள் தொடர்புகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதன் மூலம் இயங்குதன்மை மற்றும் கூட்டுத் தன்மையை மேம்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளனர்.

அரக்கோணம் படைத்தளத்துக்கு ஆஸ்திரேலியாவின் எம்பிஆர்ஏ விமானத்தில் வந்த குழுவினரை பி8ஐ விமான குழுவினர் வரவேற்றனர். தொடர்ந்து இந்திய பெருங்கடல்பிராந்தியத்தின் நுழைவு வாயிலான இந்தோனேஷியாவுக்கும் வடக்கு ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் உள்ள பகுதியில் இரு நாட்டு படையினரும் கூட்டுப் பயிற்சியை மேற்கொள்ள உள்ளனர்.

**போதுமான எண்ணிக்கையில்**

# 91% மீன் வளங்கள்

**மும்பை, ஜூலை 2:** நாட்டின் கடல் பகுதிகளில் 91 சதவீத மீன் வளங்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆய்வறிக்கையில் தகவல்**

கரோனா தொற்று பரவல் காரணமாக இரு ஆண்டுகளுக்கு மீனவர்கள் அதிகஎண்ணிக்கையில் கடல் பகுதிகளுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் இருந்ததே மீன் வளங்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கடற்பகுதிகளில் உள்ள மீன் வளங்களின் எண்ணிக்கை குறித்து மத்திய கடல் மீன்கள் ஆராய்ச்சி மையம் கடந்த 2022-ஆம் ஆண்டில் ஆய்வு மேற்கொண்டது. இத்தகைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல் முறையாகும். இந்தியக் கடல்பகுதிகளில் உள்ள 70 இனங்களைச் சேர்ந்த 135 வகை மீன் வளங்கள் ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டன. அவற்றின் எண்ணிக்கை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டது.

அதில், ஆய்வுக்கு உள்படுத்தப்பட்டவற்றில் 91 சதவீத மீன் வளங்கள் போதிய எண்ணிக்கையில் பாதுகாப்பாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 135 வகை மீன் வளங்களில் 86.7 சதவீத வளங்களின் எண்ணிக்கை மிக அதிக எண்ணிக்கையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆய்வு குறித்து, மத்திய கடல் மீன்கள் ஆராய்ச்சி மையத்தின் முதன்மை விஞ்ஞானி சோபா ஜோகிஸ்குடன் கூறுகையில், "பெரும்பாலான மீன் வளங்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவே உள்ளது. அப்படியானால், அந்த வகை மீன்களை அதிக அளவில் பிடிக்கலாம் என்பது அர்த்தமில்லை. மீன்பிடித்தல் கட்டுப்பாடற்ற வகையில் அதிகரித்தால், அந்த வகை மீன்களின் எண்ணிக்கையும் விரைவில் குறைந்துவிடும்.

தற்போதைய நிலவரப்படியே மீன் வளங்களின் எண்ணிக்கையை ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. 8.2 சதவீத வகை மீன்கள் மிக அதிக எண்ணிக்கையில் பிடிக்கப்பட்டுள்ளன. கடல் பகுதிகளில் அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. 4.4 சதவீத வகை மீன்கள் அத்தகைய நிலை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. அவற்றின் எண்ணிக்கை போதுமான அளவுக்கு அதிகரிப்பது மிகவும் கடினமானதாக உள்ளது.







பிராந்திய வாரியாக அதிகரித்த மீன் வளங்கள்

சிலவகை மீன்களின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவுக்குச் சென்று தற்போது மீண்டும் அதிகரித்து வருகிறது. இயற்கை சூழ்சி அதற்குக் காரணமாக இருக்கலாம்.

**கரோனா பரவலின் தாக்கம்:** பெரும்பாலான வகை மீன்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதற்கு, கரோனா தொற்று பரவல் காரணமாக இருக்கலாம். அப்போது அமல்படுத்தப்பட்ட பொது முடக்கத்தால் மீனவர்கள் பலர் மீன் பிடிக்கச் செல்லாமல் இருந்தனர். அதனால் மீன்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கலாம்.

எனினும், கரோனா தொற்று பரவலுக்கு முன்பு மீன் வகைகளின் எண்ணிக்கை எவ்வாறு இருந்தது என்பது தொடர்பான ஆய்வறிக்கை இல்லாததால், அந்தக் கருத்தை உறுதிப்படுத்த முடியாத சூழல் காணப்படுகிறது" என்றார்.



மீன் வளங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| போதுமான எண்ணிக்கை | **86.7%** பாம்பிரெட், டால்ஃபின் மீன், நண்டுகள், இறால் |
| மிகக் குறைந்த எண்ணிக்கை | **8.2%** கேட்ஃபிஷ், சுறாக்கள் உள்ளிட்டவை |
| குறைந்த எண்ணிக்கை | **4.4%** ஈல், டுனா வகை மீன்கள் உள்ளிட்டவை |
| முன்பு குறைந்து தற்போது அதிகரித்து வருபவை | **0.7%** ஸ்குவிட் வகை மீன்கள் |

# 60,587 தூய்மைப் பணியாளர்களுக்கு முழு உடல் பரிசோதனை திட்டம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

**சென்னை , ஜூலை 2:** தமிழகத்தில் மாநகராட்சிகள், நகராட்சிகளில் பணிபுரியும் 60,587 தூய்மைப் பணியாளர்கள் ஓராண்டுக்குள் முழு உடல் பரிசோதனை செய்துகொள்வதற்கான சிறப்புத் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தை சென்னை கோடம்பாக்கம் மண்டலம், அண்ணா பிரதான சாலையில் உள்ள எம்ஜிஆர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைச்சர் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்தார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நிகழாண்டு மானிய கோரிக்கையின்போது சுகாதாரத் துறையில் 110 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அனைத்து அறிவிப்புகளும் அடுத்த ஆண்டு மானிய கோரிகைக்குள் நிறைவேற்றப்படும். 104-ஆவது அறிவிப்பான தமிழகத்திலுள்ள அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகளில் பணிபுரியும் 60,587 நகர்ப்புற தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம் தற்போது தொடங்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஓராண்டுக்குள் அனைவருக்கும் அரசு மருத்துவமனைகளில் முழு உடல் பரிசோதனை செய்யப்படும்.



சென்னை கோடம்பாக்கம் எம்.ஜி.ஆர் நகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டத்தை ஞாயிற்றுக்கிழமை தொடங்கி வைத்துப் பார்வையிட்ட மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன். உடன், சென்னை மேயர் ஆர்.பிரியா, ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர்.

உயர் மருத்துவ சிகிச்சைகள் தேவைப்படுவோருக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும், அவர்களின் உடல்நலம் காக்க, ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் போன்ற தொற்றா நோய்கள், தோல் பிரச்னைகள், ரத்த சோகை, எலும்பியல் நோய்கள், கண் நோய்கள், பற்சிதைவு, குடல் மற்றும் கருப்பை இறக்கம் மற்றும் மனச்சோர்வு போன்ற நோய்களுக்கு உரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சிகிச்சைகள் அளிக்கப்படவுள்ளன என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் ககன்தீப் சிங் பேடி, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் டி.எஸ்.செல்வவிநாயகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# தடுமாற்றத்தில் உலகப் பொருளாதாரம்

**எம். சடகோபன்**

கரோனா தீநுண்மி பாதிப்பு 2019-இல் தொடங்கி இந்தியா உள்பட உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. கொள்ளை நோய்த்தொற்று பாதிப்புக்குப் பிந்தைய நாள்களில், பெரும் வல்லரசான அமெரிக்கா உள்பட அனைத்து நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்பட்டது. பொருளாதாரத்தில் உலக அளவில் மிகவும் வலுவாக இருப்பதாகக் கருதப்படும் இந்தியாவும் இதற்கு விதிவிலக்கு இல்லாமல் கடும் நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது.

உயர்ந்து வரும் பணவீக்கம் என்ற அசுரனின் தாக்குதல்தான் இதற்கு முக்கியமான காரணமாகும். பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு உலகளாவிய மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களை அடுத்தடுத்து உயர்த்தின. இதனால், மக்கள் கடும் இறுக்கத்திற்கு மத்தியில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக மத்திய வங்கிகள், வங்கிகளுக்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதத்தை உயர்த்துகிறது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது.

நடந்துகொண்டிருக்கும் உலகளாவிய பணவியல் இறுக்கமான மாரத்தானில், பாதி தொலைவைதான் நாம் கடந்துள்ளோம். இன்னும் இலக்கை அடையவில்லை.

பணவீக்கம் தணிந்து, கொள்கை விகிதங்கள் உச்சத்தை எட்டியபோதும், மத்திய வங்கிகள், விகித அதிகரிப்புக்குத் திரும்பியுள்ளது என்பதுதான் உண்மை.

கடந்த வாரம், பாங்க் ஆஃப் இங்கிலாந்து, சந்தைகளை ஆச்சரியத்துக்குட்படுத்தியது. எதிர்பார்த்ததை விட 0.50 சதவீதம் வட்டி உயர்வை அந்த வங்கி அறிவித்தது.

அதைத் தொடர்ந்து நார்வே, துருக்கி ஆகிய நாடுகளின் மத்திய வங்கிகளும் தங்களின் வட்டி விகிதத்தை உயர்த்தின. இதில் துருக்கி மத்திய வங்கி 6.5 சதவீதம் உயர்வுடன் ஒரு படி மேலே சென்றது. இது கிட்டத்தட்ட அதன் நாணயத்தை முடக்கியது. சில நாள்களுக்கு முன்பு, ஐரோப்பிய மத்திய வங்கியும் ஜூலையில் மேலும் அதிகரிப்பு இருக்கும் என மறைமுகமாகத் தெரிவித்தது.

இந்த நிலையில், அனைவருக்கும் அதிர்ச்சி அளிக்கும் வகையில், அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வின் தலைவர் ஜெரோம் பவல், வரவிருக்கும் மாதங்களில் கூடுதல் விகித உயர்வுகள் தேவை என்பதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இது உலகளாவிய நிதி மற்றும் பங்குச்சந்தைகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தி, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மோசமாக்கியுள்ளது.

இதற்கிடையே, ஐரோப்பாவில், பொருளாதாரக் கண்ணோட்டத்தைப் பற்றிய கவலைகள் சிக்கலை மேலும் அதிகமாக்கியுள்ளது. இந்த நிலையில், சீனாவின் மத்திய வங்கி பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க வட்டி விகிதங்களைக் குறைத்தாலும், விகிதக் குறைப்புகளின் அளவு மிகவும் சிறியதாகவே இருந்தது.

இது முதலீட்டாளர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது. மொத்தத்தில், மத்திய வங்கிகளின் நடவடிக்கை கடந்த நாட்களில் உலகளாவிய அளவில் நிதி மற்றும் பங்குச்சந்தைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதற்கிடையே,2023-2024-ஆம் ஆண்டு, உலகின் மிகப் பெரிய பொருளாதார மந்தநிலை ஆண்டாக இருக்கும் என பல மதிப்பீடுகள் கூறுகின்றன. எந்தவொரு நிதி சார்ந்த கொந்தளிப்பான, அதிரடியான முடிவுகள் உலகின் பிற பகுதிகளுக்கும் ஆபத்தானதாகவே அமையும்.

அமெரிக்க மத்திய வங்கியின் வட்டி விகித வழிகாட்டுதல், ஜூலை உயர்வு 75 புள்ளிகள் அல்லது 50 புள்ளிகளாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அடுத்து வரும் நாள்களில் நெருக்கடி இன்னும் அதிகமாவதற்கே வாய்ப்புகள் உள்ளதாக வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில், இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு (எம்பிசி) கூறுவது போல, ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸும், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் பணி பாதிதான் முடிந்துள்ளதாகவும், எம்பிசி இன்னும் விகித இறுக்கமான சூழற்சியில் இருப்பதாகவும் ஒப்புக்கொண்டார். வட்டி விகித உயர்வு என்பது மிகவும் அதீதமாக இருக்கக் கூடாது. பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பதற்கான கூர்மையான ஆயுதமாக இருக்க வேண்டும்.

பணவீக்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டம், ஒருங்கிணைந்த மற்றும் ஆக்ரோஷமான கொள்கை முடிவுகள் வெற்றியைத் தருமா என்பது கேள்வி அல்ல; ஆனால், அது மேலும் சிக்கலை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே கவலை.

உதாரணமாக, அமெரிக்க மத்திய வங்கியின் அளவுக்கதிகமான வட்டி விகித உயர்வுகள், ஆங்கிலத்தில் 'ரிஸஷன்' என்று சொல்லப்படும் பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறியாக இருக்கும் என்று அஞ்சப்படுகிறது.

எந்தவொரு மத்திய வங்கியும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார வளர்ச்சி பாதிப்பு சாத்தியத்தை முன்கூட்டியே உறுதிப்படுத்தத் தவறிவிட்டன.

மேலும், தென்மேற்கு பருவமழை குறைவாக இருக்கும்பட்சத்தில் பயிர் சாகுபடி குறைவதற்கான வாய்ப்பை நிராகரிப்பதற்கில்லை. அது போலவே, காய்கறிகளின் விலை உயர்ந்து, உணவுப் பணவீக்க அபாயங்கள் கவலை அளிக்கும் விஷயமாக உள்ளது.

பருவமழை மற்றும் பயிர் உற்பத்தி ஆகியவை மிக முக்கியமானவை. ஏனெனில், அவை கிராமப்புற நுகர்வு மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இது வளர்ச்சிக்கு முக்கியமானது.

ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவின் தற்போதைய கொள்கையானது, உண்மையான வட்டி விகிதங்கள் பொருளாதாரத்திற்கு தீங்கு விளைவிக்கும் நிலைகளை நெருங்குகிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே, எம்பிசியின் அடுத்த கொள்கை நடவடிக்கைகள் நன்கு சமநிலையில் இருக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# உலக அளவில் தமிழர்களின் பண்பாடு: முதல்வர்

**சென்னை, ஜூலை 2:** தமிழர்களின் பண்பாட்டை உலகளவில் கொண்டு செல்வோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார். மேலும், தமிழர்கள் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்க அரசு தொடர்ந்து திட்டமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (ஃபெட்னா) மாநாட்டில், காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஞாயிற்றுக்கிழமை ஆற்றிய உரை:

ஃபெட்னா அமைப்புடன் இணைந்து தமிழ்நாடு அரசின் டான்சிம் நிறுவனம், உலகத் தமிழ் புத்தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை கடந்த ஜனவரியில் நடத்தியது.

உலகெங்கும் வாழும் முதலீடு செய்யும் சக்தி படைத்த தமிழர்கள், நம் தமிழ்நாட்டில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யும் வாய்ப்பு அந்த மாநாட்டின் மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டது. தமிழ்நாட்டின் புத்தொழில் முனைவுகளில் உலகெங்கும் வாழும் தமிழர்கள் பங்கு பெற வாய்ப்பாக இருந்தது.

**முன்னோடி இனம்:** தமிழ் மொழி நமக்கு மொழியாக மட்டுமல்ல, அமுதமாக, உயிராக, நம்மை வாழ்விக்கும் மண்ணாக, இனிமை தரும் மணமாக, இளமைக்கு மருந்தாக, போராட்டக் களத்துக்கு வாளாக இருக்கிறது. அதனால்தான், தமிழ் என்றால் நாம் உணர்ச்சிவசப்படுகிறோம். இனமான உணர்ச்சி அடைகிறோம். மொழியின் பெயரை தனது பெயராக வைத்துக் கொள்வதில் முன்னோடி இனம் நாம் தான். மொழிக்காக தம் தேக்கு மர தேகத்தை தீக்கிரையாகக் கொடுத்த இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம்.

**தமிழின் தொன்மை:** உலகம் தோன்றியதைக் கணிக்க முடியாதது போன்று, தமிழின் தோற்றத்தையும், தமிழினத்தின் தோற்றத்தையும் கணிக்க முடியாத அளவுக்கு தொன்மையான வரலாறு நமக்குண்டு. அதனால்தான், இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலத்தில் இருந்துதான் எழுதப்பட வேண்டும் என்ற முழக்கத்தை முன்னெடுத்துச் செயல்பட்டு வருகிறோம்.

**கீழடி அகழாய்வு:** திமுக ஆட்சி அமைந்ததும், பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டில் பொது ஊழிக்கு முன்பாக, 6-ஆம் நூற்றாண்டிலேயே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பதையும், படிப்பு, எழுத்தறிவு பெற்ற மேம்பட்ட சமூகமாக நாம் விளங்கினோம் என்பதையும் கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது.

சிவகளையில் முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் பொது ஊழிக்கு முன்பு 1155 ஆண்டுகள் என கண்டறியப்பட்டுள்ளது. தண்பொருநை என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவியல்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. கீழடி, சிவகளை, வெம்பக்கோட்டை என பல்வேறு இடங்களில் இப்போது அகழாய்வுகள் நடைபெற்று வருகின்றன.

**ஊக்கமளிக்கும் அரசு:** தொல்லியல் ஆய்வுகளுக்கு ஊக்கமளிக்கும் அரசாக தமிழ்நாடு அரசு அமைந்துள்ளது. இந்த ஆய்வுகள் அனைத்தையும் உலக ஆய்வாளர்களின் அளவுகோலுடன் மெய்ப்பித்து, அவர்களை ஏற்றுக் கொள்ளவைத்து வெளியிடும் அரசாக அமைந்துள்ளது. இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றை முழுமையாக அறிந்து கொள்வதில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் ஆராய்ச்சிகளை தமிழ்நாடு அரசு முன்னெடுக்கும்.

இந்தியாவிலேயே அதிகப்படியான கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். அதிலும் வைகையை சுற்றித்தான். தமிழர்கள் பண்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் தொன்மையை நிரூபிக்கவும் அதை உலகளவில் கொண்டு செல்லவும் அரசு திட்டமிட்டுள்ளது.

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருள்களை உலகத் தமிழர்களும், பொது மக்களும் கண்டுகளிக்கும் வகையில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. திருவாரூரில் கலைஞர் கோட்டம் திறக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் காண அனைவரும் தமிழ்நாட்டுக்கு வர வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்வில், வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவர் பாலா சுவாமிநாதன், செயலர் கிங்ஸ்லி சாமுவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.



வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை மாநாட்டில் காணொலி வழியாக ஞாயிற்றுக்கிழமை உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**